[1995 ஏப்ரல் 24

காலத்திலே தொழில்நுட்ப ரீதியாகக் கட்டப்பட வேண்டும் என்பதை அதிகாரிகளை வைத்து அந்தப் பகுதியிலே அரசு ஆய்வு செய்யும்; அதற்குப் பிறகு உரிய முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 409, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

409—

காரைக்குடியில் புதிய மின் மாற்றி அமைத்தல்

***20466**—*திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கம்பன் மணிமண்டபம் அருகில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய மின் மாற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்டு, மின் அழுத்தம் சீரடைந்துள்ளது.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாகக் கேட்டிருந்தேன். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் சீரிய முறையில் செயலாற்றி வரும் நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டு திட்டங்களைத் தீட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு-அதிகாரிகளும் தலைமை எப்படியோ அப்படியே நாங்களும்; எள் என்றால் எண்ணெய்யாக இருந்து மக்களது குறைகளை உடனடியாகக் களைந்து வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இருந்து, அனைத்துக் குறைகளையும் அப்பகுதியில் தீர்த்து வைத்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் காரைக்குடி மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு நிலையான கட்டிடம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தபோது,அதன் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 14 லட்சம் அதற்கு ஒதுக்கீடு செய்து விரைவில் பணி துவங்கி முடிய ஆவன செய்தமைக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 50 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் அதிகமாகக் கொண்டிருக்கிற நகரமாக, தெற்குப் பகுதியில் இருக்கும் 7 மாவட்டங்களில்

1995 ஏப்ரல் 24]

பொதுவாக காரைக்குடி நகரத்தைத் தேர்ந்தெடுத்து 60 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட பழைய மின் கம்பிகள், மின் மாற்றிகள், மின் கம்பங்கள் ஆகிய அனைத்தையும் மாற்றுவதற்கு கருத்துருவை நமது மாநில அரசு மத்திய அரசுக்கு 2 வருடங்களுக்கு முன்பே பரிந்துரை செய்து இருந்தும், அதன் தற்போதைய நிலை என்ன என்பதை அறிய விரும்புவதோடு, அதைத் துரிதப்படுத்தி மிக விரைவில் காரைக்குடிக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கும் நிலையான ஒரு தீர்வை ஏற்படுத்துவார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கம்பன் மணிமண்டபத்திற்கு அருகில் இன்னொரு புதிய மின் மாற்றி அமைப்பதுபற்றித் தான் கேள்வி. நீங்கள் மத்திய அரசு வரைக்கும் கேள்வி கேட்டால் அமைச்சர் நிறைய பதில் சொல்ல வேண்டி வரும். அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்கிறீர்களா? சரி.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: முடிந்த அளவுக்குச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாஹீர் உசேன் தெரு, கம்பன் மணிமண்டபம் அருகே 100 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின் மாற்றி காரைக்குடியில் நிறுவப்பட்டு தற்போது செயல்பாட்டில் இருக்கிறது. இது தவிர காரைக்குடியிலே 230 கே.வி.ஏ. துணைமின் நிலையத்தில் மேலும் ஒரு 50 கே.வி.ஏ. திறன் கொண்ட மூன்றாவது மின்மாற்றி 23-2-1994-ல் வெற்றிகரமாக இயக்கப்பட்டுள்ளது. இது தவிர ஒரு 110 கே.வி.ஏ மின் பாதை அந்தப் பகுதியிலே அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. பொதுவாக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டதைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டுக் காலங்களில் அந்த மாவட்டத்தில் எல்லாத் தொகுதிகளின் தேவையைக் கணக்கிலே கொண்டு புதிய துணை மின் நிலையங்கள், மின் மாற்றிகள் எல்லாம் முறையாக அமைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இருந்தாலும், தமிழகம் முழுவதையும் கணக்கில் எடுத்து, ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு நிதி ஒதுக்க முடியுமோ அந்த அடிப்படையிலே தான் நாங்கள் பணிகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். ஆகவே, இந்த மத்திய அரசு சம்பந்தமானக் கேள்விக்கு ஒரு தனிக் கேள்வி போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தற்போது இதுபோன்ற நடவடிக்கைகளை காரைக்குடி பகுதியில் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே எடுத்து இருக்கிறது. ஆகவே, மின் விநியோகம் சீராக இருக்கிறது. இது போன்ற பிரச்சினைகள் மறுபடியும் எழாமல் அந்தப் பகுதிகளில் அந்தக்குறைகள் உடனுக்குடன் களையப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 410 திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஏ.கே.சி சுந்தரவேல், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.